நேற்று (04.01.2025) சென்னை, சமூக நல ஆணையரகத்தில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் மாற்றுத்திறனாளிகள் நலவாரிய திட்டத்தின்கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.9,31,000/ மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நலஆணையர் திருமதி எம்.லக்ஷ்மி, மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் சு. சுதன், (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி – அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் வளர்ச்சி பணிகள் குறித்து தெருமுனை பிரச்சாரம் கூட்டம் திருவலாங்காடு மேற்கு ஒன்றியம் பொன்பாடி பகுதியில் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் முன்னிலையில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.கே.நாகராஜ் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் ஜி.வேலாயுதம் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு முதலமைச்சர் செய்த சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றி திராவிட மாடல் அரசு செய்த சாதனைகள் குறித்து துண்டு பிரசுரம் வழங்கினார் அருகில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம், ஒன்றிய நிர்வாகிகள் ஜெயராமன் குப்பன் , அர்ஜுன் காஞ்சிபாடி சரவணன் ஆர். யுவராஜ் திலகன், கிளைக் கழக செயலாளர் குமரசாமி, வினோத் குமார், நிர்வாகிகள் சி.சு.விஜயகுமார், வி.எஸ்.சதீஷ், ஜே.லுகா, எம்.அறிவழகன், வி.எம்.மோகன், ஏ.சி.தமிழரன், பி.ஹென்றி லாரன்ஸ், பாண்டு, உள்பட பலர் கலந்து கொண்டனர்கள்

மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர்வகுப்புகளுக்குச் செல்வதில் முன்னணியில் தமிழ்நாடு!

இதுதான் தமிழ்நாடு - இதுதான் திராவிட மாடல்!

‘தினகரன்’ நாளேடு பாராட்டு!

சென்னை, ஜன. 5 -

நாடு முழுவதும் பள்ளிக் கல்வியில் மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் 100% உயர் வகுப்புகளுக் குச் செல்வதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என தினகரன் நாளேடு தலை யங்கத்தில் பராட்டுத் தெரி வித்துள்ளது.

அது வருமாறு :-

நாடு முழுவதும் பள்ளிக் கல்வியில் மாணவ, மாணவி கள் இடைநிற்றல் இல்லா மல் 100 சதவீதம் உயர் வகுப்புகளுக்கு செல்வதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்தியா முழுவ தும் உள்ள பள்ளிகளில் தொடக்க கல்வியில் இருந்து உயர்நிலை வகுப்புகள் வரையில் மாணவ, மாணவி கள் தங்கள் படிப்பை தொடர்கின்றனரா அல்லது இடையில் பள்ளிகளை விட்டு வெளியேறும் நிலை உள்ளதா? என்று கல்விக் கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை ஆய்வு நடத்தியது. நாடு முழுவதும் பள்ளிக்கல்வி யில் இடைநிற்றல் இல்லா மல் 2024ம் ஆண்டில் உயர் வகுப்புகளில் மாணவர்கள் தங்கள் பள்ளிப் படிப்பை கைவிடாமல் தொடர்வது முந்தைய ஆண்டுகளை ஒப் பிடுகையில் அதிகரித்துள்ள தாக கண்டறியப் பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் இந்த முன்னேற்றம் இருந் தாலும், கர்நாடகா, ராஜஸ் தான் போன்ற மாநிலங்க ளில் நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற் றல் அதிகரித்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நேர்மாறாக கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. கேரளாவில் பள் ளிப்படிப்பை தொடங்கிய 100 மாணவர்களில் 99.6 பேர் இடைநில்லாமல் தங் கள் பள்ளிப்படிப்பை கடந்த 2019ம் ஆண்டில் முடித்துள்ளனர். இது 2024ம் ஆண்டில் இடைநிற் றல் இல்லாமல் 100 ஆக வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த எண்ணிக்கை 2 ஆண்டுகளிலும் மாணவிக ளின் இடைநிற்றல் இல் லாத நிலை 100 ஆக இருந் தது. அதேபோல மாண வர்கள் தங்கள் பள்ளிப்ப டிப்பை தொடங்கி இடை நில்லாமல் பள்ளிப் படிப்பை விட்டுவிடாமல் 88.3 பேர் 2019ல் உயர் நிலைப்படிப்பை முடித்துள் ளனர். இது 2024ம் ஆண் டில் 95.7 என்று அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இதேபோல மாணவியர் கல் வியும் 93.2ல் இருந்து 97.5 ஆகவும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டை பொறுத் தவரையில் 100 மாணவர் கள் தங்கள் பள்ளிப்

தினகரன்

ஞாயிறு, ஜனவரி 4, 2025 சனிக்கிழமை

இதுதான் தமிழ்நாடு

நாடு முழுவதும் பள்ளிக் கல்வியில் மாணவ, மாணவிகள் இடைநிற்றல் இல்லாமல் 100 சதவீதம் உயர் வகுப்புகளுக்கு செல்வதில் தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகளில் தொடக்க கல்வியில் இருந்து உயர்நிலை வகுப்புகள் வரையில் மாணவ, மாணவிகள் தங்கள் படிப்பை தொடர்கின்றனரா அல்லது இடையில் பள்ளிகளை விட்டு வெளியேறும் நிலை உள்ளதா? என்று கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை ஆய்வு நடத்தியது. நாடு முழுவதும் பள்ளிக்கல்வியில் இடைநிற்றல்

படிப்பை தொடங்கி, அவர் களில் 99 பேர் நடுநிலைப் பள்ளிவரை இடைநில்லா மல் 2019 வரை படிப்பை தொடர்ந்துள்ளனர்.

இந்த அளவு கோலானது 2024ல் 100ஆக அதிகரித்துள் ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல மாணவிகளின் கல்வியும் 97.5ல் இருந்து 100 ஆக அதிகரித்துள்ளது. உயர் நிலைப் பள்ளிகளில் இடை நில்லாமல் படிப்பை தொடர்ந்த மாணவர்களை பொறுத்தவரையில் 81.3ல் இருந்து 89.2 ஆக அதிகரித் துள்ளது. மாணவிகளில் 89.4ல் இருந்து 95.6ஆக அதி கரித்துள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளிப்ப டிப்பைத் தொடங்கிய 100 சிறுவர்களில் நடுநிலைப் பள்ளி முடிப்பை முடித்த வர்கள் 2019ல் 99 பேர். 2024ல் 100 பேர் என உயர்ந் துள்ளது. அதேபோல, சிறு மிகள் எண்ணிக்கை, 97.5ல் இருந்து 100 ஆக 2024ல் அதி கரித்து இடையில் படிப்பை விடுவோர் தமிழ்நாட்டில் இல்லை என்பது தெளிவாகி உள்ளது. தமிழ்நாட்டில் மே ல் நி லை ப் ப ள் ளி ப் படிப்பை முடித்த மாணவர் கள் 2019ல் 81.3 என இருந் தது 2024ல் 89.2 ஆக உயர்ந் துள்ளது. மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 89.4 சதவீதமாக இருந்தது 2024ல் 95.6 சதவீதமாக அதிகரித்து சாதனை நிகழ்ந்துள்ளது. இந்த சாதனைகள் எல்லாம் ஏதோ எளிதாக நடந்துவிட வில்லை. குழந்தைகளை முதலில் பள்ளிக்கு அழைத்து வருவது என்பதே சவாலான விஷயம். அதற் கான திட்டங்கள்தான் காலை உணவுத் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், வாசிப் புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. தமிழ் நாட்டில் திராவிட மாடல் ஆட்சி என்ன சாதித்து விட் டது என்ற கேள்வி கேட்ப வர்களுக்கு இந்த சாதனை கள் பற்றி எல்லாம் தெரிந்திருக்க வாய்ப்புகள் இல்லை. இதுதான் தமிழ் நாடு. இதுதான் திராவிட மாடல்.

இவ்வாறு அத்தலையங் கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

உலகமே வியந்து பார்க்கும் வகையில் முதல்வர் – பல்வேறு

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தி தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்!

திருவள்ளூரில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், ஜன. 05-

திருவள்ளூரில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங் கத்தில் தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணை யம் திருவள்ளூர் மாவட்ட பிரிவின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் முன் னிட்டு மிதிவண்டி போட்டி நடைபெற்றது இதில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா. மு.நாசர் கலந்து கொண்டு கொடியசைத்து போட்டியை துவக்கி வைத்தார்.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் பேசும்போது,

தமிழ்நாடு முதலமைச்சர் மாணவர்களின் விளையாட்டு திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்ட ங்களை செயல்படுத்தி வருகி றார். துணை முதலமைச்சர் விளையாட்டு துறைக்கு பொறுப்பேற்றவுடன் நமது விளையாட்டு வீராங்கனைகள் சர்வதேச அளவிற்கு கொண்டு செல்லும் வகையில் சிறப்பு டன் செயல்பட்டு வருகிறார்.

உலகமே விழுந்து பார்க் கும் வகையில் தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை மாமல்லபுரம் பகு தியில் சர்வதேச சதுரங்க விளையாட்டு போட்டியை சிறப்பாக நடத்தித் தந்து பெருமை சேர்த்து உள்ளார். அப்போது போட்டியில் கலந்து கொண்ட சர்வதேச விளையாட்டு அணி வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் இது போன்ற பிரம்மாண்ட மாக ஏற்பாடு செய்து தந்ததற் காக தமிழ்நாடு முதலமைச்ச ருக்கு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அதேபோல் சென்னையில் பார்முலா 4 கார் ரேஸ் போட் டியை தமிழ்நாடு துணை முத லமைச்சர் சிறந்த முறையில் வடிவமை அமைத்து தந்து போட்டியை சிறப்பாக நடத்தி தமிழ்நாட்டுக்கு மேலும் பெருமை சேர்த்து உள்ளார் .

மிதிவண்டி போட்டியில் களம் காணும் நீங்கள் சிறப்பு டன் செயல்பட்டு முதன்மை பெற வேண்டும் மேலும் மேடையில் நிற்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் போன்று நீங்களும் மாவட்ட ஆட்சித் தலைவராக வர வேண்டும். அல்லது உங்களின் திறமைகளுக்கு ஏற்ப திறன் களை வளர்த்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் . மிதி வண்டி போட்டிகளில் களம் கண்டுள்ள அனைத்து மாண வர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமி ழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு .நாசர் தெரிவித் துள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திரு வள்ளூர் மாவட்ட பிரிவின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஆண்கள், பெண்கள் என இரு பாலருக்கும் தனித்தனியாக நடைபெறும் மிதிவண்டி

போட்டியில் 17 மற்றும் 15 வயதிற்குட்பட்ட மாணவர்க ளுக்கு 20 கிமீ போட்டி மாவட்ட விளையாட்டு அரங் கத்தில் இருந்து பூண்டி பேருந்து நிலையம் வரை சென்று மீண்டும் திருவள்ளூர் வட்டார போக்குவரத்து மந்தை வந்தடையும், 13 வய திற்குட்பட்ட மாணவர்கள் , மற்றும் 17 மற்றும் 15 வயதிற் குட்பட்ட மாணவிகள் 15 கிமீ போட்டி மாவட்ட விளை யாட்டு அரங்கத்தில் இருந்து நெய்வேலி கூட்ரோடு வரை சென்று மீண்டும் திருவள்ளூர் வட்டார போக்குவரத்து மந்தை வந்தடையும், 15 வய திற்குட்பட்ட மாணவிகள் 10 கிமீ போட்டி மாவட்ட விளை யாட்டு அரங்கத்தில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வரை சென்று மீண்டும் திருவள்ளூர் வட்டார போக்குவரத்து மந்தை வந்தடையும், இப் போட்டியில் முதல் இடத்தை பெரும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கு ரூ. 5000 வீதமும், இரண்டாம் பரிசு பெறும் மாணவ - மாணவிய ருக்கு ரூ.3000 வீதமும், மூன் றாம் பரிசு பெறும் மாணவ - மாணவியருக்கு ரூ.2000 வீதமும், நான்கு முதல் பத்து இடம் வரை பெரும் ஒவ் வொரு மாணவ மாணவிய ருக்கு ரூ.250 வீதமும், ஆக மொத்தம் பரிசுத்தொகை ரூ.70500 மற்றும் சான்றிதழ் கள் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செய லாளர் திருத்தணி எஸ்.சந்தி ரன், நாடாளுமன்ற உறுப்பி னர் சசிகாந்த் செந்தில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சி யர் த.பிரபு சங்கர், திருவள்ளூர் வருவாய் கோட் டாட்சியர் கற்பகம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளை ஞர் நலன் அலுவலர் வி .சேது ராஜன், தடகள பயிற்றுநர் லாவண்யா, நகரச் செயலாளர் திருவள்ளூர் நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச் சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் மாநில மாணவரணி இணைச் செய லாளர் சி.ஜெரால்டு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செய லாளர் எஸ்.மகாலிங்கம், பொதுகுழு உறுப்பினர் ஜி. விமல் வர்ஷன், மாவட்ட இளைஞரணி துணை அமைப் பாளர்கள் டி.மோதிலால், டி.கே.பாபு, வி.ஜெ.உமா மகேஸ்வரன், டி.ஆர்.திலீபன், நிர்வாகிகள் கு.பிரபாகரன், அயூப் அலி, வேலாயுதம், வி.எஸ்.சதீஷ், வி.தியாக ரா ஜன், சரவணன், ஆர்.ராஜா, ஆ.பவளவண்ணன், பாலு, ராஜ், திமுக நிர்வாகிகள் விளையாட்டு துறை அதிகாரி கள் வீரர்கள் பயிற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. -சிவாஜி கிருஷ்ணமூர்த்தி வழங்குகின்றனர் !

141(அ) வட்டக் கிளையில் ஏன் வேண்டும் தி.மு.க. விளக்கக் கூட்டம் - நல உதவிகள்!

தலைமை: ஜெ.கருணாநிதி! - வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கை!

சென்னை, ஜன.5

தியாகராயர் நகர் கிழக் குப் பகுதி 141 (அ) வட்டக் கழகச் செயலாளர் எஸ்.லட் சுமி காந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 141 வது (அ) வட்டக் கழகத்தில், தியாகராயர் நகர், சாதுல்லா தெரு, டக்கர் பாபா வினோபா ஹாலில் இன்று (5.1.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில், பகுதிச் செய லாளர் கே.ஏழுமலை எம்.சி. முன்னிலையில் ஏன் வேண் டும் தி.மு.க. விளக்கவுரை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமி ழச்சி தங்கபாண்டியன் எம். பி., தியாகராயர் நகர் சட்ட மன்றத் தொகுதி பார்வையா ளர் திருமதி எஸ்.பத்மபி ரியா ஆகியோர் நல உதவி களை வழங்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப் பினர் கோ.சு.மணி, 141வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், முன் னாள் வட்ட கிளை கழக செயலாளர் ஆ.ஏழுமலை, முன்னாள் வட்ட கிளை கழக செயலாளர் ஆ.சி. மணி மாறன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பா ளர் மோனிஷா கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே வட்டக் கழக நிர் வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள், அணி களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள் ளுமாறு கேட்டுக் கொள்கி றோம்.

இவ்வாறு 141(அ) வட்ட கிளை கழக செயலாளர் எஸ். லட்சுமி காந்தன் தெரிவித் துள்ளார்.

‘டான்டி’ பிரகாஷ் தலைமை! ஜெ. கருணாநிதி, கே. ஏழுமலை, எஸ். ஜோயல் முன்னிலை!

துணை முதல்வர் பிறந்த நாள்: கல்வி உபகரணங்கள் - நல திட்ட உதவிகள்!

மாவட்ட செயலாளர் த. வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன.05

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை ஒட்டி கல்வி உபகரணங்கள் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ‘டான்டி’ பிரகாஷ் தலைமையில் நாளை 06.01.2025 திங்கட்கிழமை காலை 11:00 மணிக்கு தியாகராயர் நகர் தொகுதி ரங்கராஜபுரம் 2 வது தெரு வில் அமைந்துள்ள அங்கன்வாடி மாநகராட்சி பள்ளியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஜெ. கருணாநிதி எம். எல்.ஏ., பகுதி செயலாளர் கே. ஏழுமலை, தலைமை பொது குழு உறுப்பினர் கோ.சு. மணி, மாநில இளைஞரணி செயலாளர் தூத்துக்குடி எஸ் ஜோயல் ஆகியோர் முன்னி லையிலும்,

மாவட்ட அமைப்பாளர், திமு.க. இளைஞர் அணி ராஜா அன்பழகன் எம். சி., மாவட்ட துணை அமைப்பா ளர்கள் எஸ்.உமாசங்கர், எ. அஸ்வின் குமார்,

திணேஷ் மாணிக்கம், த.விக்னேஸ்வரன் ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட கழக செயலாளர் த. வேலு எம்.எல்.ஏ. அங்கன்வாடி சிறுவர் சிறுமிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் நல திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இதில் மாம்பலம் ஆ. சந்திரசேகர், நந்தனம் வேதா, கோடம்பாக்கம் மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன்

மற்றும் மாநில மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகி கள் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள் கழக உடன் பிறப்புக்கள் அனை வரும் வருக! வருக என வரவேற்கிறோம்.

வட்டச் செயலாளர்கள் கே.எஸ். வெல்டிங் ராஜா, கார்த்திகா பாஸ்கர் MC., நா மோ முரளி நன்றியுரை ஆற்றுகின்றனர்.

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலசந்திரன் அலுவலகத்தில் நேரில் சந்தித்து மக்களின் பல்வேறு கோரிக்கைகளை தெரிவித்து ஆலோ சனை மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்இந்திரன், வே.கருணாநிதி, இஜோசப்அண்ணாதுரை, ஜெயபிரதீப் சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

திருப்பத்தூரில் இலவச பயிற்சி!

திருப்பத்தூர், ஜன. 5 -

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தனது சொந்த செலவில் சிறப் பான பயிற்றுனர்களை கொண்டு இந்த பயிற்சி வகுப்பு இலவசமாக நடத்தப் படுகின்றது. பயிற்சி வகுப்பு துவக்கவிழாவிற்கு திருப்ப த்தூர் நகர செயலாளர் சு. ராசேந்திரன் தலைமை தாங்கி னார். க.சையத் அலீம் வரவேற்பு வழங்கி, ஒன்றிய கழக செயலாளர்கள் K.A.குண சேகரன், K.முருகேசன், K.S.A.மோகன்ராஜ், சேர்மென் கள் சங்கீதாவெங்கடேஷ், விஜயாஅருணாசலம், திருமதி திருமுருகன் ஆகியோர் முன் னிலையில் தூயநெஞ்ச க்கல் லூரி முதல்வர் அருட்தந்தை D.மரியஆண்டனிராஜ், தமிழ் செம்மல்.Dr.இரத்னநட ரா ஜன், குட்வில் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி பொருளாளர். R.M.சிவானந்தம், செயலாளர். இராமானுஜம் ஆகியோர் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியில் சி.வெங்கடேசன் நன்றியுரை யாற்றி தொகுதி மாணவ மாணவியர் நலனுக்காக பாடும்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இளைஞர்களும், பெற்றோர்க ளும், கல்வியாளர்களும் பாராட்டுதலுடன், நன்றி தெரிவித்தனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

புழல் 24வது வட்டத்தில் மாபெரும் கண் சிகிச்சை முகாம்!

கே.பி.சுந்தரேசன் தலைமையில் - வழக்கறிஞர் எம்.கௌதமன் ஏற்பாட்டில்!

சென்னை, ஜன.5-

புழல் 24வது வட்ட திரா விட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் இன்று (5.1.2025 - ஞாயிற்றுக்கி ழமை) காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்ட செயலா ளர் கே.பி.சுந்தரேசன் தலை மையில் வட்ட நிர்வாகிகள் அவைத் தலைவர் சி. ஜே.ரவி, துணை செயலா ளர்கள் என்.எழில்ராவ ணன், எம்.அந்தோணி, மலர்கொடி, செல்வராஜ், பொருளாளர் பி.கென்னடி, வட்ட பிரதிநிதிகள் ஏ.ஜெய கர் பி.எஸ்.என்.எல். நாக ராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.உதயபாரி ஆகியோர் முன்னிலையில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் தமிழ்நாடு அரசு வழக்கறிஞரும் 24 வது வட் டப் பிரதிநிதியுமான வழக் கறிஞர் எம்.கௌதமன் ஏற் பாட்டில் புழல் திரு வீதி அம்மன் கோவில் தெருவில் ஆலமரம் அருகில் அமைந் துள்ள சமுதாய நலக் கூடத் தில் நடைபெற உள்ளது.

கண் சிகிச்சை முகாமை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாத வரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ.,

மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால் ஆகி யோர் கலந்து கொண்டு துவக்கி வைத்து சிறப்பிக்கின்றனர்.

எனவே கழகத் தோழர் கள் அனைவரும் கண் சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு உங்களை அன்போடு கேட் டுக்கொள்கிறோம்.

மேலும் சிகிச்சை பெற வருபவர்கள் ஆதார் கார் டினை கட்டாயமாக எடுத்து வர வேண்டும்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர பி.கே. சேகர்பாபு அறிவிப்பின்படி, அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. 7வது மண்டலக் குழுத் தலைவர் பி .கே மூர்த்தி , தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோரின்) முன்னிலையில், வட்ட ச் எம். இ.சேகர் எம்.சி., தலைமையில் (3.01.2025), (04.01.2025) ஆகிய தினங்களில் காலை, வார்டுக்கு உட்பட்ட பாகங்கள், 246, 247,248,249வது பாகங்களில் உள்ள தெருக்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து மக்களின் தேவைகளை கண்டறியும் பணியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், மாநகராட்சி மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோருடன் நேரில் சென்று கேட்டறிந்தனர்.